**நான் கடவுள் திரைப்படத்தில் யார் கடவுள்?**

குருடியான ஒரு பெண் [ கதாநாயகி] வில்லனால் சித்ரவதைக்குள் ஆளாக்கப்பட்டு, உருகுலைந்து கடைசியில் கதாநாயகனிடம் , இந்து- முஸ்லிம் - கிறிஸ்துவக் கடவுளர் ஒருவர் கூட ஏன் தன்னைக் காப்பாற்றவில்லை என்ற கேள்வியை சமூகத்தின் முன் வைக்கிறாள். இக்கேள்வி நாஸ்திகவாதம் மிக்கது. கருணை, காக்கும் தன்மை என சர்வ வல்லமையும் கொண்ட கடவுள் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட அனைத்து மதங்களையும் இக்கேள்வி சிந்திக்க வைக்கிறது. அவ்வாறு ஒரு கடவுள் இருப்பாரானால் பின் ஏன் உலகில் அப்பாவி மக்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர்?ஏன் அக்கடவுள் அவர்களைக் காக்கவில்லை.

இக்கதாநாயகிகைப் போலவே நாம் அனைவருக்குள்ளும் ஒரு கேள்வி எழ வேண்டும். நம்மைப் படைத்து-காத்து - ஆளும் கடவுள் என்பவர் ஒருவர் இருப்பாரானால் அவர் எந்த மதத்தைச் சார்ந்தவர்?

அப்படி ஒரு கடவுள் இருப்பாரானால் அவர் ஏன் அப்பாவிகளைக் காப்பதில்லை? உலகில் கஷ்டப்படும் மக்களுக்குப் பின் யார் தான் உதவுகிறார்கள்?உண்மையான அன்பும் கருணையும் மிக்க மனிதர்களே அப்பாவி மக்களின் கண்ணீரைத் துடைக்கிறார்கள். இன்று நாம் எவ்வளவுக்கு எவ்வளவு நாகரிகம் அடைகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு கருணையற்ற மனம் உடையவர்களாகி வருகிறோம். அதே போல் நாம் மதவாதங்களில் மிக ஆழ்ந்து வெறித்தனமாக ஈடுபட்டு, மதவாதிகளாய் மாறி வாழ்வதால் அவ்வெறி இன்று உலகில் தீவிரவாதமாக உருவாகி உலகில் மனிதகுலத்துக்கே ஒரு அபாய எச்சரிக்கை உண்டாக்கி உள்ளது.

வாழ்வில் எவ்வித உதவியும் கிடைக்காமல் அவதியுறும் வேளையில் மனிதன் கடவுளின் உதவியைத் தேடுபவன் ஆகிறான். அதைப் போலவே தான் இப்படத்தின் நாயகியும் வாழ்வின் போராட்டத்தின் உச்சகட்டத்தினை அடையும் வேளையில், மாறி மாறிப் பல மதக் கடவுள்களை அழைக்கிறாள். ஆனால் பரிதாபம், இந்தக் கடவுள்களில் ஒருத்தர் கூட அவளை மனிதத்தன்மையே இல்லாத வில்லனிடம் இருந்து காக்க வரவில்லை.

இப்படி எந்தக் கடவுளும் உதவாத நிலையில் அவள் '' நான் கடவுள்!'' [ அகம் ப்ரம்மாஸ்மி] என்று கூறியபடி வாழும் ஒரு மனிதனிடம் புகலிடம் தேடிச் செல்கிறாள். அவனோ வில்லன்களுக்குத் தண்டனையாக அளிக்கும் மரணத்தினையே, தன்னைச் சரணடைந்த அப்பெண்ணிற்கும் தந்து அவளை அனைத்து கஷ்டங்களில் இருந்தும் விடுவிக்கிறான். வாழ்வின் கஷ்டங்களுக்கு வடிகாலாக மரணத்தைத் தருவதை எதார்த்தத்தில் நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? சாகும் மனிதன் ஒருவனைக் கடவுளாகச் சித்தரிக்கும் இயக்குனரின் நோக்கத்தினை நாம் ஏற்க முடியுமா? மேலும் தன்னை நாஸ்திகன் என்று கூறிக்கொள்ளும் இயக்குனர், ''தான் கடவுள்'' என்று கருதி வாழும் ஒரு அகோரி சாமியார் பாத்திரப் படைப்பினைக் கொண்டு வாழ்வின் துன்பங்களுக்கு முடிவுகள் கூறுவது எவ்வாறு சரியாகும்? இதனாலேயே இப்படத்தினைப் பார்க்கும் பலருக்கு, இயக்குனர் இப்படத்தில் என்ன தான் கூற வருகிறார் என்னும் குழப்பம் ஏற்படுகிறது.

கதாநாயகி மூலம் வியாபரமயமாக்கப் பட்ட மதங்களைச் சாடும் இயக்குனர் ''நான் கடவுள் '' என்று கூறி வாழும் ருத்ரன் பாத்திரத்தை முன்வைப்பதன் மூலம் ''ருத்ரன் என்னும் சிவன் தான் உண்மையான கடவுளா?'' என்ற கேள்வியையும் நமக்குள் உண்டாக்குகிறார். அப்படி என்றால் இந்த ருத்ரன் என்னும் சிவன் தான் கடவுளா என்றால் ''அதுவும் இல்லை''. இயக்குனர் மிக மதிநுட்பத்துடன் பல உருவகங்களின் மூலம் , மதம் என்பது ஒருபோதும் மனித குலத்துக்கு உதவி செய்வதாக இல்லை, கருணையும் அன்பும் கொண்ட ஆன்மீகமே உறுதுணை செய்கிறது , அதுவே மனித இனத்தைக் காப்பாற்றும் என்பதை ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

**பிச்சைக்காரர்களின் கதை**

''தாண்டவன்'' என்ற சமூக விரோதி தன் வாழ்க்கைத் தேவைக்காக, பிச்சைக்காரர்களை வைத்துத் தொழில் நடத்துகிறான். அக்கூட்டத்தினை அடிபணிய வைக்க, அவர்களுக்குத் தன் மீதுள்ள பயத்தினையும் உடலளவிலான கொடுமைகளையும் பயன்படுத்துகிறான். இக்கூட்டம் பொதுமக்கள் பார்க்க முடியாத ஒரு பாதாள அறைக்குள் இயங்குகிறது. தாண்டவனுக்குக் கீழ் சில குண்டாக்களும் செயல்படுகின்றனர். இவை அனைத்தும் தென் இந்தியாவில் ஒரு கிராமத்தில் நிகழ்கின்றன.

இக்கிராமத்துக்கு, ருத்ரன் என்ற அகோரி தன் தந்தை மற்றும் தங்கையால் காசியிலிருந்து மீண்டும் தன் குடும்பத்துக்குள் அழைத்துவரப்படுகிறான். சிறு வயதில் ஒரு ஜோதிடர் சொன்ன ஆலோசனையின் படி ருத்ரா காசியில் சென்று வேதங்கள் கற்க விடப்படுகிறான். பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவனது தாயாரின் வற்புறுத்தலின் பேரில் அவன் தந்தை காசிக்குச் சென்று பலபாடுபட்டுத் தேடுகிறார்.கடைசியில் வேறுபட்ட கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்ட அகோரி வகைச் சாமியார்களின் கூட்டத்தில் தன் மகனைக் காண்கிறார். தன் குருவின் கட்டளையை ஏற்று ருத்ரனும் தன் கிராமத்திற்கு வருகிறான்.

தாண்டவனின் கூட்டாளி ஒரு குருட்டுப் பெண்ணைத் தன் கூட்டத்துக்குள் வலுக்கட்டாயமாக அழைத்து வந்து சேர்க்கிறான். அவ்வேளையில் ஒரு மலையாளத் தரகன் தாண்டவனை அணுகித் தனக்கு சில பிச்சைக்காரர்கள் தேவை என்று பெரும் வியாபாரம் பேசுகிறான். இதனால் பல பிச்சைக்காரர்கள் இக்கூட்டத்துள் இருந்து வலுக்கட்டாயமாகப் பிரித்தெடுத்துச் செல்லப்படுகின்றனர். வியாபார நோக்கில் அவன் பார்க்கவே மிகவும் கொடூரமான அறுவறுக்கத் தக்க முகம் உடைய காமுகன் ஒருவனை அழைத்து வருகிறான். அவன் இக்குருட்டுப் பெண்ணை அடைய விரும்பி விலையும் பேசுகிறான். ஆனால் அதற்கு அவள் எதிர்ப்புத் தெரிவிக்க , அவளை அடித்துச்

சித்ரவதை செய்யும் தாண்டவன் கடைசியில் ஒரு கல்லால் அவளது முகத்தையும் உடலையும் உருகுலையச் செய்து விடுகிறான். இக்கொடுமைகளைத் தாங்க முடியாத அவள் கடைசியில் ருத்ரனைச் சரண் புகுகிறாள். சமூக விரோதிகளைக் கொல்லும் ருத்ரன் அவளையும் கொன்று விட்டு தன் குருவிடம் சென்று சேர்கிறான்.

**உருவகங்கள் கூறும் கருத்துகள்**

வெளிப்படையாகப் பார்க்கும் போது, இப்படம் பிச்சைக்காரர்களின் வாழ்க்கையைப் பற்றியது போல் இருக்கிறது. வியாபார நோக்கில் பிறப்பிலேயே ஊனமுற்றவர்களையும் ஊனம் ஆக்கப் பட்டவர்களையும் சமூகவிரோதிகள் ஆட்டிப்படைப்பது காட்டப்படுகிறது. மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் அவர்கள் வாழ்க்கையின் கொடுமைகளும் உணர்ச்சிமயமான பல கட்டங்களையும் இப்படம் காட்டுகிறது. இன்றைய உலகில் வியாபாரமாக்கப் பட்ட அனைத்து விஷயங்களையும் இயக்குனர் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

பல் வேறு கடவுள்களையும், புகழ் பெற்ற திரைப்பட நடிகர்களையும் வியாபார விற்பன்னர்களையும் பிச்சைக்காரர்கள் தங்கள் பிழைப்புக்காக வேஷமிட்டுக் காட்டுகின்றனர். நாம் அனைவருமே இவ்வுலகில் வெறும் பொருளாசைக்காக மட்டுமே வியாபாரமயமாக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதன் உருவகமே இதன் பொருள் ஆகும்.

வியாபார வர்த்தகங்களும் மதங்களும் வெறுமனே பொருள் இச்சையின் அடிப்படையில் தான் இயங்குகின்றன. கோயில் போன்ற வழிபாட்டுத் தலங்களும் கூட இன்று வெறும் பணத்துக்கான நோக்கத்துடனே இயங்குகின்றன.பல தெய்வத் திருவடிவங்களும் இன்று வியாபார நோக்கில் வெறும் பணத்துக்காகவே பயன்படுத்தப் படுகின்றன. இந்த உண்மையின் உருவகமே முருகன், கண்ணன், அனுமன் போன்ற வேஷங்கள் ஆகும். இளையராஜாவின் இன்னிசையில் தவழும் '' பிச்சைப் பாத்திரம் ஏந்தி வந்தேன்'' என்ற பாடல் இக்கருத்தினை மிகவும் ஆழமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது. நமக்குள் இருக்கும் இச்சையின் காரணத்தினாலேயே தான் நாம் பிறக்கிறோம். அப்பிறவில் நாம், எலும்பு-ரத்தம்-சதையால் ஆன உடல் எனும் பிச்சைப் பாத்திரத்தினை ஏந்தி அலைகிறோம் என்ற ஆழ்ந்த தத்துவம் உணர்த்தப் படுகிறது.

**சுயநல அன்பு**

மனித வாழ்வின் உன்னத உறவுகள் கூட இன்று வியாபாரமயமானதை இயக்குனர் வெகு அழகாக உணர்த்துகிறார். எவ்வித எதிர்பார்ப்பும் கட்டாயமும் இல்லதாததே தூய உண்மையான அன்பு ஆகும். ஆனால் இதை இன்று நாம் புரிந்து கொள்ளவில்லை. நாம் எதிர்பார்ப்பது மற்றவரிடம் இருந்து பெறுவதையே ''அன்பு'' என்று தவறான இலக்கணம் கண்டுள்ளோம்.

இப்படத்தில் ருத்ராவின் தாய் முதலில் இந்த நோக்கில், தான் எத்தனைப் பாடுபட்டு தன் பத்து மாத கர்ப்பத்தில் சுமந்து மகனாகப் பெற்று வளர்த்தார் என்று பேசி உணர்ச்சிவயப்படுகிறார். ஆனால் பின்னர் ருத்ரா பட்டினத்தார் பாடல் மூலம் ஒரு தாயின் மகத்துவத்தினையும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் அவளது பெரும் பங்கினையும் விளக்கியவுடன் அத்தாயின் குகம் அமைதியாகி விடுகிறது. அவளது வாயால் அவள் தன் மகனை, ''அவன் சுயம்பு'' என்று கூறி அமைதி பெற்று விடுவதைக் காண்கிறோம். அதாவது தன் மகன் தான் யார் என்பதை அறிந்த ஞானியாகி விட்டான் என்று அத்தாய் உணர்ந்து கொள்கிறாள்.

இந்திய ஆன்மீகத்தில் ''சுயம்பு'' என்பது ''தானாகவே உருவான ஒன்றைக் குறிக்கும்''. ''தான்'' என்பது அகம். இது என்றும் எப்போதும் இருப்பது. இதை யாரும் உருவாகவே முடியாது. அறிவியல் இதைத் தான் ''மெய்யுணர்வு'' என்று கூறும். இந்த மெய்யுணர்வில் இருந்தே சக்தியானது தோற்றுவிக்கப் படுகிறது. இச்சக்தியே பல பரிணாமங்களை அடைந்து பல பொருள்களாகவும் பற்பல பிறவிகளை எடுத்தும் முடிவில் மனிதனாகித் தான் யார் என்பதை உணர்ந்து தெளிகிறது. இந்த அற்புதமான அறிவியல் தத்துவத்தினையே இந்திய ஆன்மீகம் சக்தி சிவனொடு இணைவதாகக் காட்டுகிறது.

**சக்தியும் விழிப்புணர்வும்**

''நான் என்பது எனது உடல் தான்'' என்று அறியாமையால் வாழ்வதே ''அகங்காரம்'' எனப்படுகிறது. இதையே '' ஈகோ'' என்கிறோம். தாண்டவன் பாத்திரம் இ'ந்த ஈகோவின் உருவகமே ஆகும். ஈகோ பயத்தாலும் பாதுகாப்பின்மையாலும் கட்டுப்பாட்டாலும் நம்மை அடக்கி வைத்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்வில் அனுபவிக்கும் அற்ப இன்பங்கள் அனைத்தும் சில காலத்துக்குத் தான் நீட்டிக்கும். ஆனால் இந்த வாழ்க்கை முழுதும் சுயநலமான ஈகோவால் தான் வாழப்படுகிறது. தாண்டவன் தன் கூட்டத்தினை அடக்கி வைத்திருப்பதைப் போல் ஈகோ நம்மை அடக்கிக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. இதை நாம் அறியாமலேயே வாழ்கிறோம். இதுவே ''மாயை'' என்பது ஆகும்.

வாழ்க்கையின் போக்கில் இவ்வாறு வாழ்ந்து ஒரு கட்டத்தில் ஈகோவின் பிடியில் மிகவும் துன்புற்று அல்லல் படுகிறோம். இவ்வேளையில் தான் நாம் முழுமையாக இத்துன்ப நிலையில் இருந்து முற்றிலும் விடுபட விரும்புகிறோம், தவிக்கிறோம். இத்துன்பத்தில் இருந்து நம்மை மீட்கக் கூடியது '' அகம்'' என்ற ஆன்மாதான். இந்த அகம் எவ்வித பந்தமும் பிணைப்புகளும் கட்டுப்பாடுகளும் இல்லாதது. எனவே இந்த அகம் தான் நம்மை ஈகோவில் கட்டுப்பாட்டுக்குள் இருந்து மீட்டு விடுதலை பெற வைக்கும்.இந்தக் கருத்தை இயக்குனர் மிக அற்புதமாக உருவகப் படுத்தியுள்ளார்.

சக்தியானது தன் சிவத்துடன் இணைய வேண்டிப் பரிதவிக்கிறது என்பதையே கதாநாயகி ருத்ரனின் காலைப் பிடித்துக் கொள்வதாக உருவகப் படுத்துகிறார் இயக்குனர். இவ்விடத்தில் அகம் என்பதே சிவம் ஆகும். இக்காட்சியில் நாயகி சிவப்புப் பாவாடை அணிந்திருக்கிறாள். இவ்வாடையின் சிவப்பு நிறம் சக்தி சிவத்துடன் கலந்த நிலையை உணர்த்தும் உருவகமே ஆகும். சிவசக்தி ஐக்கியமான தன்மையை ருத்ரனின் சிவந்த நெற்றிக் கண்ணும் நாயகியின் தொண்டையில் ஏற்படுத்தப் பட்ட நெற்றிக் கண் குறியும் உணர்த்துகின்றன.

**அகம் ப்ரம்மாஸ்மி- நான் கடவுள்**

இந்தக் கருத்தை உணர்த்தும் காட்சியே படத்தின் மிகச் சிறந்த காட்சி ஆகிறது. நம்முள் உறங்கும் அகத்தை எழுப்புவதை இக்காட்சி காட்டுகிறது. நம்முள் உள்ள அகத்தை நாம் அறியாமல் போனால், நம் ஈகோ நம் வாழ்க்கையைப் படாதபாடு படுத்திவிடும்.இந்த அகத்தையே ருத்ரா தன்னுள் உணர்ந்து தெளிந்து கொண்டவன் ஆகிறான். அதனாலேயே அவன் ''அகம் ப்ரம்மாஸ்மி- நான் கடவுள்'' என்று கூறுகிறான். வேதங்களை விளக்கும் ப்ருகதரண்ய உபநிஷத்தில் இருந்தே இந்த மகா வாக்கியம் எடுக்கப் பட்டுள்ளது.

இந்த அகம் தான் மெய்யுணர்வு எனப்படுகிறது. இதுவே நம்முள் இருக்கும் மிக உயர்ந்த உண்மையாகும். இதுவே ப்ரபஞ்சத்தின் அனைத்தையும் தோற்றுவிக்கிறது. இந்த மெய்யுணர்வே ''கடவுள்'' என்று பல பெயர்களிலும் வடிவங்களிலும் பல மதங்களால் அழைக்கப் படுகிறது. நம்முள் இந்த அகத்தை உணர்ந்து அதைக் கண்டு அறிவதே நம் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். அதுவே மனிதப் பிறவியின் பயன் ஆகும். ஆனால் இந்த ஆன்மீகத் தேடல் முறையாக ஒரு நல்ல குருவின் வழிகாட்டல் இருந்தால் தான் நிகழும். இதைக் குறிக்கவே படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் குருநாதர் காட்டப் படுகிறார்.

இந்திய ஆன்மீகத் தத்துவத்தில் ''ருத்ரன்'' என்பது நம்முள் உள்ள மெய்யுணர்வைத் தட்டியெழச் செய்யும் சக்தியே ஆகும். அதனாலேயே நம் ஈகோ அழியும். நமது ஈகோ அடியோடு அழிவதால் மட்டுமே நமக்கு உண்மையான விடுதலை கிடைக்கிறது. இந்த விடுதலைக்கு ஏங்கித் தான் கதாநாயகி கதறி அழுகிறாள், மன்றாடுகிறாள். இப்பிறவி மட்டும் இல்லாது அடுத்து உள்ள அனைத்துப் பிறவிகளும் அழிய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைக்கிறாள். இதையே அழகாக இயக்குனர் உருவகப் படுத்தியுள்ளார்.

நாயகி தனக்குள் உள்ள ஈகோவால் கஷ்டப்படுகிறாள். அவளது ஈகோ அவளைக் கட்டுப்படுத்தி ஆட்டிப்படைக்கிறது. இதுவே நம் ஒவ்வொருவருக்குள்ளும் நிகழும் போராட்டம் ஆகும். நாம் என்பது நம் ஈகோ அல்ல. ஆனால் ஈகோ தான் நம்மை அடிமைப் படுத்திக் கஷ்டப்படுத்துகிறது. இந்த ஈகோவின் பிடியில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்வதே ''மோட்சம்'' அல்லது ''முக்தி'' ஆகும். ஒரு பிறவியில் அது முடியாதபோது அந்த முக்திக்காக மேலும் மேலும் பல பிறவிகள் நாம் எடுக்க வேண்டும்.

**இப்பிறவியும் மறுபிறவிகளும்**

கதாநாயகி தான் பலரிடம் கை மாறி அல்லல் படுவதை எண்ணி எண்ணி அழுவது, நாம் பல பிறவிகள் எடுத்து கஷ்டப்படுவதன் அற்புதமான உருவகம் ஆகும். தனக்குப் பிறவிகளில் இருந்து விடுதலை வேண்டும் என்று அவள் கெஞ்சுகிறாள். ஒவ்வொரு பிறவில் வரும் பிறப்பும் மரணமும் மிகவும் வேதனைக்குள்ளானது. காரணம் ஒவ்வொரு பிறப்பிலும் நாம் பலருடன் உறவுகளிடம் பற்று வைத்திருக்கிறோம். கதாநாயகி ஒரு கூட்டத்தில் இருந்து மற்றொரு கூட்டத்திற்கு மாற்றப்படும் போது அவள் அடையும் மன வேதனை இதனை உணர்த்தும் உருவக நிகழ்ச்சி ஆகும்.

சென்ற பிறவியில் சாகும் போது உறவுகளை விட்டுப் பிரிந்து வர வேதனைப்படும் நாம் மறுபிறவியில் புதிய உறவுகளுடன் இணைவதை உடனே ஏற்க கஷ்டப்படும் கருத்தையே இது உணர்த்துகிறது.தன் வளர்ப்புத் தந்தையை விட்டுப் பிரிவதைப் பொறுக்க முடியாமல் அழும் நாயகியின் தன்மை இக்கருத்தை இன்னும் நன்றாகவே உணர்த்தும். அதனால் தான் பிறந்த குழந்தைகள் நிலையற்ற உறவுகளையே எண்ணி அழுவதாக சித்தர்கள் பாடியுள்ளனர்.

**ப்ரபஞ்சத் தோற்றம்**

நம்முள் உண்டாகும் அறிவுத் தாகத்துக்கு பதில் சொல்லும் அற்புதமான படம் நான் கடவுள். இதுவரை இதைப் போன்ற படம் வந்ததில்லை. படத்தில் ஆரம்பத்துக்கு சற்று முன் அண்டசராசரங்களும் கிரகங்களும் தோன்றிச் சுழல்வது ப்ரபஞ்சத்தின் தோற்றத்தினைக் காட்டுவதாக அமைகிறது.

உலகில் காணும் பல விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானது. உதாரணத்திற்கு, பூமி நிற்பதாகவும், பூமியைச் சூரியன் சுற்றுவதாகவும் நாம் காண்கிறோம். ஆனால் அது உண்மையா? அதற்கு நேர்மாறாக அல்லவா நடக்கிறது? இந்த தத்துவத்தினை உணர்த்தவே இயக்குனர்,

'' கண்ணை நம்பாதே , உன்னை ஏமாற்றும்'' என்ற பாடலை ஒலிக்கச் செய்கிறார்.

அறிவியல் ஆய்வுகள் இன்று வரை மனிதனுள் விளங்கும் ''மெய்யுணர்வு'' பற்றித் தெளிவாக அறியவில்லை. ஆனால் வெளிப்புற உண்மைகளை உணரவே உதவி வருகிறது. உண்மையான ஆன்மீகத்தின் துணையுடன் அறிவியல் இதை விளக்கலாம், ஆனால் ஒருபோதும் மதங்கள் இதை விளக்கைத் தெளிய வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முள் விளங்கும் மெய்யுணர்வைத் தெளிந்து அறிவதே மனிதப் பிறவியின் லட்சியம் ஆகும். நாம் என்பது வெறும் இவ்வுடல் அல்ல. உடலுள் இருக்கும் அகம் . இந்த அகத்தினை உணர்வதால் அது நம் கர்மவினைகளை நீக்கி, பிறவித் தளைகளைப் பொசுக்கிப் பிறவிகளில் இருந்து விடுதலையும் தரும். இல்லையென்றால் நாம் மீண்டும் மீண்டும் இவ்வுலகில் நம் ஆசையான இச்சையால் பிறந்து பிச்சை எடுக்க வேண்டியது தான் என்று அழகான பாடலால் இயக்குனர் விளக்குகிறார்.

நமது ஆசைகள் காமவெறியாக மாறும் போது ஈகோ நம்மை மிகவும் வாட்டிவதைக்கும். இக்காம வெறியானது மிக மிக கோரமானது. நாயகியை அடையத் துடிக்கும் காமுகனின் மிகம் மிகவும் கோரமாகக் காட்டப்படுவதன் உருவகம் மேற்சொன்ன கருத்தை உணர்த்தவே என்பதைப் புரிந்து கொள்ளவும்.

மேலும் மலையாள ப்ரோக்கர் மூலம். அடிக்கடி தன் வியாபாரத்தினை காலத்துக்கு ஏற்ப மக்கள் மாற்றிக்கொள்வதை, பிச்சைக்காரர்களை வாங்குவதன் மூலம் உணர்த்தியுள்ளார் இயக்குனர்.

மேற்சொன்ன அனைத்து விதமான ஈகோவில் நிலைகளும் மாற வேண்டும். ஒவ்வொரு சமூகவிரோதியின் சாவும் இதை உணர்த்துகிறது.ஆனால் கடைசியில் ஈகோ அழிக்கப்படும் போது தான் நம்முள் விடுதலை உண்டாகும். ஈகோவை அழிப்பதே வில்லனுக்குத் தரப்படும் மரணம். ஆனால் அதுவே நாயகிக்கு தரப்படும் வரம் என மாறுகிறது. இந்த ஈகோ அழிக்கப்படுவதையே நம் ஆன்மீகம் பல சடங்குகள் மூலம் காட்டியும் உள்ளது.

**சடங்குகள்**

அனைத்து சடங்குகளும் சம்ப்ரதாயங்களும் நம்முள் ஏற்படும் மாறுதல்களைக் கொண்டுவரவே உருவாக்கப் பட்டுள்ளன. ஆனால் மதங்களில் கூறப்படும் இவ்வகைச் சடங்குகள் அனைத்தும் மாற்றங்களைப் பற்றி எல்லாம் கவனத்தில் கொள்ளப்படாமலேயே நிகழ்த்தப் படுகின்றன. விலைமாது ஒருத்தி மார்கழி மாதத்தில் தனக்குத் தொழில் சரிவர அமைவதில்லை என்று புலம்புவதன் மூலம் வெற்றுச் சடங்குகளைக் கடைப்பிடிக்கும் சமூகத்தினைச் சாடியுள்ளார் இயக்குனர். சடங்குகளைப் பின்பற்றும் மக்களும் அவற்றிற்குப் பின் பல தீய செயல்களையும் ஒழுங்கீனங்களையும் தானே கடைபிடிக்கிறார்கள்?

இதைப் போல் பற்பல கருத்துகளை உருவகப்படுத்தியுள்ளது இத்திரைப்படம். ஆர்யாவும் பூஜாவும் மற்ற அனைத்து நடிகர்களும் மிக அற்புதமாக நடித்துள்ளனர். இது அவர்களின் வாழ்நாள் சாதனை எனலாம். ஆர்யாவின் அதிகம்பீர நடை கூட ருத்ர மூர்த்தி தத்துவத்தின் சக்தியை, ஈகோவை அழிக்கும் ஆற்றலை உணர்த்துகிறது.

**அகம் ப்ரம்பாஸ்மி- நான் கடவுள்**

எவ்வித மதத்து மக்களும் வழிபாட்டு இடங்களில் கடவுளின் வடிவத்தின் முன்நின்று வணங்கலாம். சிலர் வடிவம் இல்லாமலேயே வழிபடலாம். ஆனால் எதுவானாலும் ஒவ்வொருவரும் ப்ரார்த்திக்கும் போது தன்னுள் இருக்கும் அகத்திடம் தான் தனக்குத் தானே பேசி வழிபடுகின்றனர். எவ்வித தனிமனித வழிபாடும் கத்தி ஆரவரித்து கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் வானத்தை நோக்கி இருப்பதில்லை. ஒவ்வொரு மதத்திலும் அந்தரங்க வழிபாடு என்பது அமைதியாக நமக்குள் உள்ள அகத்தின் முன் நம்பிக்கையுடன் வைக்கப்படுகிறது.

**பின் யார் கடவுள், அவர் எங்கே?**

கடவுளுக்கும் நமக்கும் உள்ள மிகக்குறைந்த தூரம் ‘‘அகம்’’. நம்முள் உள்ள அகம் தான் கடவுள். அகம் தனக்குத் தானே ப்ரார்த்திக்கிறது. எனவே ப்ரார்த்தனைகள் அனைத்தும் அகத்தை நோக்கியே செய்யப்படுவதால் அதன் பயன்களும் அகத்தின் உள்ளே இருந்தே வருகின்றன.

வெறும் மதத்தினை நம்புபவர் கடவுளை ப்ரபஞ்சத்தின் வெளியில் இருப்பதாக நம்பித் தொழுகிறார். அவர்கள் தாங்கள் தங்களுக்கு உள்ளேயே உள்ள தங்கள் அகத்திடன் தான் பேசுவதாக அறிவதில்லை.

ஆன்மீகவாதி கடவுள் என்பது அகம் என்பதை அறிந்து விடுகிறான். அந்த அகம் என்பது அனைத்து பொருள்களிலும் அனைவருள்ளும் இருப்பதை உணர்க்கிறான். இதுவே ஒரு மதவாதிக்கும் ஆன்மீகவாதிக்கும் உள்ள மிக முக்கியமான வேறுபாடு ஆகும். இந்த உண்மையையே ‘‘அகம் ப்ரம்மாஸ்மி- நான் கடவுள்’’ என்று நான் கடவுள் திரைப்படம் உணர்த்துகிறது.